# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - ஒழிவில் காலம்
## திருவேங்கடமுடையான் திருவடிகளில் காலமெல்லாம்
## வழுவிலா அடிமை செய்யப் பாரித்தல்

** ஒழிவில் காலம் எல்லாம் * உடனாய் மன்னி *
வழு இலா அடிமை * செய்ய வேண்டும் நாம் **
தெழி குரல் அருவித் * திருவேங்கடத்து *
எழில் கொள் சோதி * எந்தை தந்தை தந்தைக்கே 1

எந்தை தந்தை தந்தை * தந்தை தந்தைக்கும்
முந்தை * வானவர் * வானவர் கோனொடும் **
சிந்து பூ மகிழும் * திருவேங்கடத்து *
அந்தம் இல் புகழ்க் * கார் எழில் அண்ணலே 2

அண்ணல் மாயன் * அணி கொள் செந்தாமரைக்
கண்ணன் * செங்கனி வாய்க் * கரு மாணிக்கம் **
தெண்ணிறைச் சுனை நீர்த் * திருவேங்கடத்து *
எண் இல் தொல் புகழ் * வானவர் ஈசனே 3

ஈசன் வானவர்க்கு என்பன் * என்றால் * அது
தேசமோ * திருவேங்கடத்தானுக்கு **
நீசனேன் * நிறை ஒன்றும் இலேன் * என் கண்
பாசம் வைத்த * பரஞ்சுடர்ச் சோதிக்கே 4

சோதி ஆகி * எல்லா உலகும் தொழும் *
ஆதி மூர்த்தி என்றால் * அளவாகுமோ? **
வேதியர் * முழு வேதத்து அமுதத்தை *
தீதில் சீர்த் * திருவேங்கடத்தானையே 5

வேம் கடங்கள் * மெய் மேல் வினை முற்றவும் *
தாங்கள் தங்கட்கு * நல்லனவே செய்வார் **
வேங்கடத்து உறைவார்க்கு * நம என்னல்
ஆம் கடமை * அது சுமந்தார்கட்கே 6

சுமந்து மா மலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
அமர்ந்து வானவர் * வானவர் கோனொடும் **
நமன்று எழும் * திருவேங்கடம் நங்கட்கு *
சமன் கொள் வீடு தரும் * தடம் குன்றமே 7

** குன்றம் ஏந்திக் * குளிர் மழை காத்தவன் *
அன்று ஞாலம் * அளந்த பிரான் ** பரன்
சென்று சேர் * திருவேங்கட மா மலை *
ஒன்றுமே தொழ * நம் வினை ஓயுமே 8

ஓயு மூப்புப் * பிறப்பு இறப்புப் பிணி *
வீயுமாறு செய்வான் * திருவேங்கடத்து
ஆயன் ** நாள் மலராம் * அடித் தாமரை *
வாய் உள்ளும் மனத்து உள்ளும் * வைப்பார்கட்கே 9

வைத்த நாள் வரை * எல்லை குறுகிச் சென்று *
எய்த்து இளைப்பதன் முன்னம் * அடைமினோ **
பைத்த பாம்பணையான் * திருவேங்கடம் *
மொய்த்த சோலை * மொய் பூந்தடம் தாழ்வரே 10

** தாள் பரப்பி * மண் தாவிய ஈசனை *
நீள் பொழில் * குருகூர்ச் சடகோபன் சொல் **
கேழ் இல் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
வாழ்வர் வாழ்வு எய்தி * ஞாலம் புகழவே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---